1981 செப்டம்பர் 1]

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் செய்து வரும் ஆராய்ச்சி.

வினா எண் 439—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னை மரத்தையும், பனை மரத்தையும் (cross polination) ஒட்ட வைத்து தென்னை மரத்தைப் போலவே பனை மரத்தை உருவாக்கும் ஆராய்ச்சியை கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் செய்து வருவது உண்டா ?

விடை— இல்லை.

பொட்டனேரி ஆராய்ச்சி நிலையம்.

வினா எண் 440—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணை (பொட்டனேரி)யில் தண்ணீர் பற்றாக் குறை இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அதைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) பொட்டனேரி ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது தேவையான தண்ணீர் வசதி உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடம் இல்லை.

இணைப்பு-II.

[672-ம் பக்கத்திலுள்ள உடுகுறியிடாத வினா எண் 320-க்கான விடையைக் காண்க.]

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக் கோயில் பக்தர்களால் காணிக்கையாக செலுத்தப்படும் முடியை சேகரித்துக் கொள்ளும் உரிமை பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில், முடி சேகரித்துக் கொள்ளும் உரிமை சரியான தொகைக்கு ஏலத்தில் போவதில்லை. அப்பொழுது திருக்கோயில் நேரடி நிர்வாகம் மூலம் சேகரிக்கப் பட்ட முடி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

(ஆ) 1975 முதல் 1980 (நவம்பர் முடிய) காணிக்கையாகக் கிடைத்த முடியின் மூலம் மேற்படி திருக்கோயிலுக்கு கிடைத்த வருமான விவரம் கீழ்வருமாறு :—

காலம்.	ஏலமுறை.	முடியின் மூலம் கிடைத்த குத்தகை தொகை அல்லது கிரயத் தொகை.
(1)	(2)	(3)
		ரூ.
1. 1-2-75 முதல் 31-1-76 முடிய	பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டது.	1,51,000.00
2. 1-2-76 முதல் 31-1-78 முடிய	ஷை	3,02,000.00
3. 1-2-78 முதல் 28-2-78 முடிய	திருக்கோயில் நேரடி நிர்வாகம் மூலம் சேகரிக்கப்பட்ட முடியை பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.	13,51.000
4. 1-3-78 முதல் 31-8-78 முடிய	பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டது.	90,300.00
5. 1-9-78 முதல் 31-8-79 முடிய	ஷை	2,20,000.00
6. 1-9-79 முதல் 30-11-79 முடிய.	திருக்கோயில் நேரடி நிர்வாகம் மூலம் சேகரிக்கப்பட்ட முடியை ஏலத்தில் விற்பனை செய்யப் பட்டது.	55,250.00
7. 1-12-79 முதல் 30-11-80 முடிய.	பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப் பட்டது.	3,10,000.00

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS